**<u>தேர்வுகள் அவசரம்</u>**

**அனுப்புநர்**

முனைவர். சி. உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.

**ந.க.எண்.084862 / F1 / 2019** **நாள் : 21.02.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** இடைநிலை மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் மார்ச் / ஏப்ரல் 2020 – தேர்வு மையங்களுக்கு முதன்மை விடைத்தாட்கள் மற்றும் வரைபடம் வழங்குதல் தொடர்பாக கூடுதல் அறிவுரைகள் வழங்குதல் – சார்பு.

**பார்வை :** இவ்வலுவலக இதே எண்ணிட்டக் கடிதம், நாள் : 28.01.2020 மற்றும் 11.02.2020

*****

பார்வையில் காணும் கடிதங்களின் வாயிலாக மார்ச் / ஏப்ரல் 2020 இடைநிலை மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள முதன்மை விடைத்தாட்களின் வகைகள் மற்றும் வரைகட்டத்தாள், வரைபடங்கள் ஆகியவற்றை முதன்மை விடைத்தாளுடன் வைத்து தைக்க வேண்டிய பக்கங்களின் விவரம் ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டன.

தற்போது ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுரைகளுள் பின்வருமாறு திருத்தம் செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ. எண். | தேர்வு | பாடத்திட்டம் | பாடம் | ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுரை | திருத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வு | புதிய பாடத்திட்டம் | வரலாறு | முதன்மை விடைத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன்னர் ஒரு இந்திய வரைபடத்தினை வைத்து தைக்க வேண்டும். | முதன்மை விடைத்தாளின் கடைசி தாளுக்கு முன்னர் ஒரு இந்திய வரைபடத்தினையும், ஒரு உலக வரைபடத்தினையும், வைத்து தைக்க வேண்டும்.<br><br>**ஏற்கனவே முதன்மை விடைத்தாளுடன் ஒரு இந்திய வரைபடம் மட்டும் வைத்து தைக்கப்பட்டிருப்பின், ஒரு உலக வரைபடத்தினை முதன்மை விடைத்தாளின் கடைசி பக்கத்திற்கு பின்னர் வைத்து தைத்து, அதன்பின் Stabler pin-ம் செய்ய வேண்டும்.** |

| வ. எண். | தேர்வு | பாடத்திட்டம் | பாடம் | ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுரை | திருத்தம் |
|---|---|---|---|---|---|
| 2 | இடைநிலை பள்ளி விடுப்புச் சான்றிதழ் (SSLC) தேர்வு | பழைய பாடத்திட்டம் | தமிழ் | SSLC Tamil<br>மார்ச் 2020 தேர்விற்கு புதிதாக அச்சிடப்பட்ட முதன்மை விடைத்தாளை வழங்க வேண்டும். | SSLC Tamil<br>**அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின்** மூலம் முத்திரையிட்டு வழங்கப்படவுள்ள முதன்மை விடைத்தாளை வழங்க வேண்டும். |

உதவி இயக்குநர்கள் இப்பொருள் தொடர்பாக தங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலை தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கும் தெரிவித்து, மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் புதிய பாடத்திட்டத்தில் வரலாறு பாடத்தில் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு கூடுதலாக தேவைப்படும் உலக வரைபடங்களை வழங்கிடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலை தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு தகுந்த அறிவுரைகளை வழங்கிடுமாறும், முதன்மை விடைத்தாட்களை முகப்புத்தாளுடன் தைக்கும்பொழுது அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்படும் அறிவுரைகளை தவறாது பின்பற்றிட அறிவுறுத்திடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–
**இயக்குநர்**

**நகல் :**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
   – தகவலுக்காக வழங்கப்படுகிறது.
2. கண்காணிப்பாளர்கள், எச்1, பி1 மற்றும் கே பிரிவுகள் (அலுவலகம்).